# Padasalai's Public Exam 2022 – Model Question Paper

**வகுப்பு : 11** **தமிழ்** **மதிப்பெண் : 90**

## முழுப்பாடத் தேர்வு - 2022

I.உரிய விடையை எழுதுக: ( 14 x 1 = 14 )

1.வான் பொய்த்தது – என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப்பொருள் --------------------.

(அ) வானம் இடிந்தது (ஆ) மின்னல் வெட்டியது (இ) மழை பெய்யவில்லை (ஈ) கலங்கியது

2.மொழிமுதல் எழுத்துக்களின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க.

(ஆ) அன்னம் , கிண்ணம் (ஆ) டமாரம்,இங்ஙகனம் (இ) ரூபாய்,லட்சாதிபதி (ஈ) றெக்கை,அங்ஙகனம்

3.தவறான இணையைத் தேர்வு செய்க.

(அ) மொழி + ஆளுமை – உயிர் + மெய் (ஆ) தமிழ் + உணர்வு – மெய் + உயிர்

(இ) கடல் + அலை – உயிர் + மெய் (ஈ) மண் + வளம் – மெய் + மெய்

4.அழகும் அறிவும் இளமையும் வாய்த்தவள் – யார் யாரிடம் கூறியது ?

(அ) அமைச்சர் கவிஞரிடம் (ஆ) மன்னர் அனைச்சரிடம்

(இ) அமைச்சர் மன்னரிடம் (ஈ) மன்னன் அமுதவல்லியிடம்

5.துன்பப்படுபவர் ------------------------.

(அ) தீக்காயம் பட்டவர் (ஆ) நாவைக் காக்காதவர் (இ) பொருளை காக்காதவர்

6.ஒப்புரவு என்பது --------------------.

(அ) அடக்கமுடையது (ஆ) பண்புடையது (இ) ஊருக்கு உதவுவது (ஈ) செல்வமுடையது

7.பற்று நீக்கியவனுக்கு உண்டாவது – பற்றற்றவனைப் பற்றுவதால் உண்டாவது.

(அ) பற்றுகள் பெருகும் – பொருள்களின் இன்பம் பெருகும்.

(ஆ) பற்றுகள் அகலும் – பொருள்களின் துன்பம் அகலும்.

(இ) பொருள்களின் துன்பம் அகலும் – பற்றுகள் அகலும்.

(ஈ) பொருள்களின் இன்பம் பெருகும் – பற்றுகள் பெருகும்.

8.பகுபத உறுப்புகளுள் இடம்பெறும் அடிப்படை உறுப்புகள் எவை ?

(அ) பகுதி , விகுதி (ஆ) பகுதி , விகுதி , விகாரம் (இ) பகுதி , விகுதி , சந்தி (ஈ) பகுதி , விகுதி , இடைநிலை

Padasalai.Net

9.கூற்று – கோடு என்பது தமிழ்ச்சொல் ஆகும்.

விளக்கம் – கோடு என்னும் சொல்லுக்கு மலையுச்சி ,வல்லரன் ,கோட்டை என்னும் பொருள்களும் உண்டு.

(அ) கூற்று சரி , விளக்கம் சரி (ஆ) கூற்று சரி , விளக்கம் தவறு

(இ) கூற்று தவறு , விளக்கம் சரி (ஈ) கூற்றும் தவறு , விளக்கமும் தவறு 1

10.யாரே உனைப்போல் அனுதினமும் உழைப்போர் ? இது எவர் மொழி ?

(அ) வாய்க்கால் (ஆ) நாங்கூழ் (இ) நடராசன் (ஈ) புல்

11.உறுபகை , இடன் ஆகிய சொற்களின் இலக்கணக்குறிப்பு ------------------

(அ) உரிச்சொல் தொடர் , ஈற்றுப்போலி (ஆ) பெயரெச்சம் , பண்புத்தொகை
(இ) வினையெச்சம் , வினைத்தொகை (ஈ) வினைதொகை , பண்புத்தொகை

12.ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க --------------------

(அ) காவலாளி (ஆ) மேலாளர் (இ) உதவியாள் (ஈ) ஆசிரியர்

13.ஜனப்பிரளயம் என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் ------------------

(அ) மக்கள் அலை (ஆ) உயிர் அலை (இ) மக்கள் வெள்ளம் (ஈ) மக்கள் அவை

14.பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று --------------

(அ) சாழல் (ஆ) சிற்றில் (இ) சிறுதேர் (ஈ) சிறுபறை

Padasalai.Net

**பகுதி - II**

**பிரிவு – I**

எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளி. ( 3 X 2 = 6 )

15.இனம் மொழி குறித்து இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.

16.ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள – இவ்வடி எதனைக் குறிப்பிடுகிறது ?

17.மதீனா நகரம் மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக.

18.ஏதிலியாய்க் குருவிகள் – சிறு குறிப்பு தருக.

**பிரிவு - II**

**எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி. ( 2 X 2 = 4 )**

19.பேச்சுமொழி , எழுத்துமொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன் ?

20.பழங்குடியினர் எத்தகைய நீரைக் குடிநீராகப் பயன்படுத்தினர்.

21.நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல் – என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.

**பிரிவு - 3**

எவையேனும் ஏழனுக்கு விடை தருக. ( 7 x 2 = 14 )

22.வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

குமரனைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டுமா ? என் வீட்டிற்கு வருகைத் தாருங்கள். என் வீட்டிற்கு பக்கத்து

வீடுதான் குமரனது வீடு.

23.பகுபத உறுப்பிலக்கணம் தருக ( ஒன்று மட்டும் )

(அ) கொடுத்தான் (ஆ) வியந்து

24.புணர்ச்சி விதி தருக ( ஒன்று மட்டும் )

(அ) புலனறிவு (ஆ) பாசிலை

25.தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.

கோசல மக்கள் நாடு ஒரு மகிழ்ச்சியாக சிறந்த வாழ்ந்து. நாடு வந்தனர்.

26.கீழ்க்காணும் வடமொழிச் சொற்களைத் தமிழாக்குக.

அ) சங்கீதம் ஆ) வித்தியா இ) மகாஜனம் ஈ) சாகரம்

27.சொல்லைப் பிரித்து சேர்த்தும் தொடர் அமைக்க.

எட்டுவரை வைகை

எள்துவரை ( அல்லது ) வை கை

28.பொருத்துக.

அ) தொல்காப்பியம் - சங்கநூல்

ஆ) திருக்குறள் - பக்தி நூல்

இ) புறநானூறு - அற நூல்

ஈ) திருவாசகம் - இலக்கண நூல்

29.முதலியன , முதலான – பொருளறிந்து சொற்றொடர் அமைக்க.

30.மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

உலை , உளை , உழை ( அல்லது ) கனை , கணை

**பகுதி – III**

**பிரிவு - 1**

**எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. ( 2 X 4 = 8 )**

31.சு.வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றை குறிப்பிடுகிறார் ?

Padasalai.Net

32.உயர்தமிழை உயிரென்று போறுமிங்கள் – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

33.சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை ?

34.விரும்பியதை அடைவது எப்படி ? குறள் வழி விளக்குக.

**பிரிவு – 2**

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக. ( 2 X 4 = 8 )

35.என்னுயிர் தமிழ் மொழி என்பேன் என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழிப் பற்றினை எழுதுக.

36.மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது – என்பதை எடுத்துக்காட்டுடன் விவரிக்க.

37.ஜீவாவின் பேச்சுநடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை ?

38.கொற்கை , வஞ்சி , தொண்டி , வளாகம் – விளக்கம் 3

.

**பிரிவு – 3**

**எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. ( 3 X 4 = 12 )**

39.சொற்பொருள் பின்வரும் நிலையணி ( அல்லது ) உவமை அணியை சான்றுடன் விளக்குக.

40.பழமொழியை வாழ்க்கை நிகழ்வோடு தொடர்புபடுத்தி எழுதுக.

போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து

41.தமிழாக்கம் தருக:

அ) The pen is mightier than the Sword.

ஆ) A picture is worth a thousand words.

இ) Work while you work and play while you play.

ஈ) Knowledge rules the world.

42.மெய்ப்புத்திருத்துனர் பணிவேண்டி நாளிதழ் முதன்மையாசிரியருக்குக் கீழ்க்காணும் விவரங்களுடன்

தன்விவரக்குறிப்பு ஒன்று எழுதுக.

( பெயர் , வயது . பாலினம் , பிறந்த நாள் , பெற்றோர் , முகவரி , அலைபேசி எண் , மின்னஞ்சல் முகவரி

அறிந்த மொழிகள் , எடை , உயரம் , குருதிவகை , கல்வித்தகுதி )

43.இலக்கிய நயம் பாராட்டல்:

பெற்றெடுத்த தமிழ்தாயைப் பின்னால் தள்ளி

பிறமொழிக்கு சிறப்பளித்த பிழையை நீக்கி

ஊற்றெடுத்தே அன்புரையால் உலுங்க வைத்திவ்

Padasalai.Net

உலகத்தில் தமிழ்மொழிக்கு நிகரும் உண்டோ ?

கற்றுணர்ந்தே அதன்இனிமை காண்பாய் என்று

கம்பனொடு வள்ளுவனைச் சுட்டிக் காட்டித்

தெற்றெனநம் அகக்கண்ணைத் திறந்து விட்ட

தெய்வக்கவி பாரதிஓர் ஆசான் திண்ணம். - நாமக்கல் கவிஞர்

## பகுதி – IV

**இரு பக்கங்களுக்கு மிகாமல் விடை தருக. ( 3 X 6 = 18 )**

44.திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை , தென்கரை நாட்டுப் பாடல்கள்வழி இயற்கை வளங்களை

விவரிக்க.

( அல்லது )

பாரதிதாசன் ஒரு புரட்சிக்கவி என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.

45.சுந்தர ராமசாமியின் காற்றில் கலந்த பேரோசை என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும்

என்பதை விளக்குக.

( அல்லது )

நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சுமொழியையும் எழுத்து மொழியையும்

எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.

46.பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை ?

( அல்லது )

நர்த்தகி நடராஜின் நேர் காணல்வழி அறிந்தவற்றைத் தொகுத்து அளிக்க.

## பகுதி – V

அடிப்பிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக. ( 4 + 2 = 6 )

47.அ) சிற்றூரும் – எனத் தொடங்கும் புரட்சிக்கவி பாடல்.

ஆ) பட்டு – என முடியும் குறளை எழுதுக.

Padasalai.Net